செய்தி வெளியீடு எண்: 848 நாள்: 19.11.2018

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. அதன் முதல் கட்டமாக சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட உணவு விடுதிகள், பேரங்காடிகள், ஷாப்பிங் மால்கள் மற்றும் திருமண மண்டப உரிமையாளர்களுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி 17.11.2018 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய கலையரங்கத்தில் ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 174 பேர் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தனர்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் திரு. D. சேகர், அவர்கள் சிறப்புரை ஆற்றி அரசின் பிளாஸ்டிக் தடைப் பற்றியும், பிளாஸ்டிக் தடையை நடைமுறைப்படுத்துவதில் அனைத்து பங்குதாரர்களுங்கும் உள்ள கடமையை பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த வரலாற்று சிறப்புமிக்க செயலை கடைக்கோடி மனிதனும் கடைபிடிக்க வழி செய்வோம் எனக் கூறினார்.

திரு. A. தங்கபாண்டியன், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், அவர்கள் தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் மாற்றுப் பொருட்கள் பற்றிய விளக்கப்படத்தை எடுத்துரைத்தார்.

நிறைவாக, முனைவர். திரு. A. சாமுவேல் ராஜ்குமார், சுற்றுச்சூழல் பொறியாளர், அவர்கள் நன்றியுரை ஆற்றி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**